
ராக்கெட் இரகசியம்!
2.50

விரைவில் வருகிறது!

மின்னல்படை தோன்றும்–

லயன் காமிக்ஸ்

# முகமில்லா மாயாவி!



பாக்கட் சைஸ் • 130 • பக்கங்கள்

ரூ. 4/-




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும்
வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன். முகவரி : பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
தபால் பெட்டி எண் : 374, சிவகாசி - 626 123. போன் : 20649.
அச்சிட்டோர் : ஸ்ரீ விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.
வெளியீடு எண் : 92.


1942ல் - பிரான்ஸின் ஒரு ஓரத்தில்.... ஐரோப்பாவை நிலை குலையச் செய்து கொண்டிருந்த கடுமையான இரண்டாம் உலகமகா யுத்தத்தின் கொடுமை பற்றி ஏதுமறியாத இளம் சிறுவர்கள் இருவர் உல்லாசமாக படகுப் பயணம் செய்து கொண்டிருந்தார்கள்...
வெகுதூரம் வந்து விட்டோம்... வா.. பியரி - திரும்பிவிடலாம்!
வாவ்..! வாவ்..! ஆற்றில் இவ்ளோ தூரம் இதுவரை நான் வந்ததே யில்லை.. படு ஜோரா இருக்கு! இன்னும் கொஞ்ச தூரம் போயிட்டு அப்புறமா திரும்பலாம்!
தங்களுக்கு இருந்த உற்சாகத் தில் தலைக்கு மேலே சிதல மடைந்து தொங்கிய கம்பி வலையையோ அதில் மாட்டப் பட்டிருந்த அபாய எச்சரிக்கை அறிவிப்பையோ அவ்விரு சிறுவர்களும் கவனிக்கத் தவறிவிட்டார்கள்.
EINTRITT VERBOTEN
எதிரே ஆறு ஒரு பெரிய ஏரியோடு போய் இணை கிறது பார்.. லூயிஸ்!


பரந்து விரிந்த ஏரியின் மத்தியில் சிறு தீவு ஒன்று இருந்தது. அந்த இடம் சற்று வித்தியாசமாக காட்சி யளித்தது. அடர்ந்த செடி கொடிகள் புதராக எங்கும் மண்டிக் கிடக்க அந்த இடம் மட்டும் கருகித் தீய்ந்து மயானம் போல் வெறிச்சோடிக் கிடந்தது.
எனக்கு வயிற்றை கலக்குது பியரி... மரங்கள் எல்லாம் இடிவிழுந்து எரிந்து போயிட்ட மாதிரி தோணுது...
நீ சொல்றது சரிதான்.. ஒரே நிசப்தமா கெடக்கு- வா போயிடுவோம்.
பியரி திரும்பி நடக்க யத்தனித்தபோது அவனுடைய சகோதரன் உரக்க குரல் கொடுத்தான்..
பியரி.. கொஞ்சம் நில்லேன்! இங்கே யாரோ பெயிண்டினால் தரையில் ஏதோ வரைஞ்சிருக்காங்க!
இலக்கு மையம்! இந்த நிலப்பரப்பு எதற்கோ இலக்காக குறியிடப் பட்டிருக்கிறது.. நாங்கள் அதன் மையப் பகுதியில் நின்று கொண்டிருக்கிறோம்.
லூயிஸ்.. ஆபத்து! - வா.. ஓடிப் போயிடுவோம்!


இருவரும் குதிகால் பிடரியில் அடிக்க மிதவைப் படகை நோக்கி ஓட்டமாய் ஓடியபோது, பியரியின் பீதியை உறுதிப் படுத்துவது போல் வானில் வித்தியாசமான ஒரு ரீங்கார ஓசை எழுந்து வேகமாக வலுப்பெற்று வந்தது.
பியரி.. என்ன ஆச்சு உனக்கு?
காலில் அடிப் பட்டிட்டுது... எனக்காக நில் லாதே.. போ.. போய் டாடியிடம் இங்கே நாம் கண்டதைச் சொல்.. நான் எப்படி யாவது வந்து சேர்ந்திடறேன்!


பீதியினால் குழம்பிப் போயிருந்த லூயிஸ் தன் அண்ணன் சொன்னபடி செய்யலானான்..
ஷ்ஷ்...!
அ..அ..ந்த ஓசை - என்னவா யிருக்கும்?


மறுகணம் - அந்த தீவையை இரண்டாக பிளப்பதுபோல் வந்து ஆக்ரோஷமாக தாக்கியது ஒரு ராக்கெட்...
ஐ..யோ!
காதைச் செவிடாக்கும் ஓசையை தொடர்ந்து எங்கும் ஒரே புகை மண்டலம்... மீண்டும் - அங்கே மயான அமைதி! சுயவுணர்விழந்த நிலையிலும் கையில் அகப்பட்ட மரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டிருந்தான் லூயிஸ்.
தீவு அடியோடு நாசமாகி விட்டது.. பியரி என்ன ஆனானோ?


நீரோட்டத்தில் மரத் துண்டோடு மிதந்து வந்த லூயிஸின் சுயவுணர்வற்ற உடலை பிரெஞ்சு விவசாயிகள் கண்டு கரை சேர்த்தபோது இடையே பல மணி நேரம் கரைந்து விட்டிருந்தது.
எதிர்ப்பு படை யினரிடம் உடனடி யாக நாம் இதை தெரிவிக்க வேண்டும்..
பிரான்ஸ் முழுவதும் ஜெர்மானியர்க ளின் ஆதிக்கத்திலிருந்த காலம் அது! புரட்சி செய்ய நினைக்கும் எதிர்ப்புப் படை மறைமுகமாக பிரிட்டிஷ் அரசுக்கு துணை நின்றனர்!
இலக்கு வைத்து செலுத்தப்பட்ட ஏவுகணையா? அது ஒரு சோதனை களமாக இருக் கலாம்.. ஏவு தளமும் அருகில் தான் இருக்கக் கூடும்.
தொடர்ந்து தகவல் அனுப் புங்கள்.. ஆவன செய்யக் காத்தி ருக்கிறோம்.
மேலிடத்து உத்தரவுக்காக இருதினங்கள் பொறுமையாக காத்துக் கிடந்த அந்த அதிரடிப்படை உத்தரவு கிடைத்ததும் சீறிக் கொண்டு கிளம்பியது..
இடம் வந்து விட்டது காப்டன்
பிரெஞ்சுக் காரர் கள் கொஞ்சமும் எதிர்பாராத சிக்கல் இது.. பிரெஞ்ச் நாட்டைச் சேர்ந்த ராக்கெட் விஞ் ஞானி எதிரிக ளின் ஆக்கிரமிப்பு தொடங்
கிய சிலதினங் களில் காணாமல் போய்விட்டது தான் பிரச்னை யின் தொடக்கம். ஆனால் அது இப்படி முற்றும் என்று யாருமே நினைக்கவில்லை



'மின்னல் வீரர்கள்' என்று பெருமையாக பேசப்பட்ட அந்த அதிரடிப்படை உறுப்பினர்கள் பாராசூட்டை கட்டிக் கொண்டு குதிக்க தயாராக இருந்தார்கள்.
அவர்களது தலைவன் மாத்யூஸ்! ஜான் ஸ்மித் ஜூல்ஸ் கார்சியா மற்றும் போலந்து நாட்டை சேர்ந்த மிக் பால்ஸ்கி அவரது நம்பிக்கையான சகாக்கள்!
இந்த முகாமில் எல்லாவித பாது காப்பு ஏற்பாடு களும் உண்டு -அகழி உள்பட..! நம் பணிந்து சற்று கடுமையானதாக இருக்கும்!
அகழியை சுலப மாக நீந்திக் கடந்து விடலாம். - எதிரிகள் மட்டும் கண் களை மூடிக் கொண்டு விட் டால்!
முதலைகளும் ஏதாவது ஒரு காரணத்திற்காக இன்று மட்டு மாவது உண்ணா விரதம் மேற் கொண்டிருக்க வேண்டும்!
சிவப்பு விளக்கு அணைந்து பச்சை விளக்கு எரியத் தொடங்கியது. ஒவ்வொரு வராக அந்த டகோடா விமானத்திலிருந்து வெளியே பாய்ந்தனர்..
எங்களுடைய கையாள் திட்டப் படி இலக்கை வந்தடைந்து காத்துக் கொண்டி ருப் பானா..? அவன் வழிகாட் டாமல் ஏவுகணை தளத்தை சென்ற டைவது என்பது இயலாத காரியம்!



மின்னல் வீரர்கள் தங்களுடைய பாராசூட்டை சுருட்டிக் கட்டி ஒளித்து வைத்த மறு வினாடியே புதருக்குள்ளிருந்து மௌனமாக வெளிப்பட்டது ஓர் உருவம்..
காப்டன் மாத்யூஸ்? நான் இங்கே உங்கள் 'கையாள்' பெயர்.. லாட்ரெக்! வினாடிப் பொழுதும் வீணடிக்க முடியாது. என்னை பின் தொடர்ந்து வாருங்கள்!
அடர்ந்த கானகத்தினூடே அந்த பிரெஞ்சு வழிகாட்டியை பின் தொடர்ந்து விரைந்தனர் மின்னல் வீரர்கள்...
நாம் எங்கேதான் போகிறோம்... காப்டன்!
முகாமை சென்றடைய இவனை கேள்வி எதுவும் கேட்காமல் பின் தொடர வேண்டும் என்பது புலனாய்வுத் துறையினரின் உத்தரவு
முகாமுக்குச் செல்லும் எண்ணெய் வண்டிகள் சற்று நேரத்தில் இவ்வழியாக வரக் கூடும். இந்தப் பகுதி முற்றிலுமாக தங்கள் வசத்தில் இருப்பதாக ஜெர்மானியர்கள் நம்பிக் கொண்டிருப்பதால் யாரும் பாதுகாப்பாக துணை வர மாட்டார்கள்.
அந்த வண்டிகளை மடக்கி, எண்ணெயை கொட்டிவிட்டு உங்கள் ஆட்களை உள்ளே ஒளிந்து கொள்ளச் செய்தால் முகாமினுள் பத்திரமாக போய்ச் சேர்ந்து விடலாம்!



முகாமின் அமைப்பு பற்றிய விரிவான வரை படம் இதோ. நீங்கள் மீட்க வந்திருக்கும் விஞ்ஞானி தங்கியிருக்கும்
இடமும் சிவப்பு மையினால் குறியிடப் பட்டிருக்கிறது. அங்கிருந்து எப்படி வெளி யேறுவீர்களோ.. அது உங்கள் பாடு
நான் சொன்ன எண்ணெய் வண்டிகள் அதோ வந்து விட்டன.




அவசரமாக தீட்டப்பட்ட அந்த சூழ்ச்சித் திட்டத்தில் லாட்ரெக் முக்கிய பங்கேற்றான்.
நிறுத்துங்கள்... தோழர்களே! யாரோ நிறுத்தச் சொல்லி சைகை செய்கிறார்கள்! நாம் எல்லோரும் மிகுந்த எச்சரிக் கையோடு செயல் பட வேண்டும்.
ஸ்டாப்..! ஸ்டாப்..! மேலே போனால் ஆபத்து! பிரிட்டிஷ் கமாண்டோக் கள் உங்களை அழிக்க கண்ணி வெடியை வைத்தி ருக்கிறார்கள்.


எல்லா வண்டிகளும் நின்றன..
பிரிட்டிஷ் கமாண்டோக்கள் கண்ணி வெடி வைத்திருப்பதாக இவன் சொல்கிறான். இப்படியே திரும்பி போய் விடுவோமா?
பொறுங்கள்.. அவனை தீவிர மாக விசாரிப் போம்!
நான்கு ஜெர்மானியர்களும் லாட்ரெக்கை நெருங்கியதும் மாத்யூஸ் ஒரு கையை உயர்த் தினார். மூன்று மின்னல் வீரர்கள் புதருக்குள் ளிருந்து வெளியே. பாய்ந்தனர்.
ஐயோ.. அவனை அப்படி அடிக்காதே மிக்.. செத்துத் தொலைக்கப் போகிறான்!
அப்புறம் இவனுக்கு மயக்கம் தெளியும் போது தலையை வலிக்கும்- அந்த அளவுக்குத்தான் அடித்திருக் கிறேன் ஜூல்ஸ்!


வேகமாக அதேசமயம் ஆர்ப்பாட்டமின்றி கச்சிதமாக நடந்து முடிந்தது அந்த தாக்குதல், அக்கம் பக்கத்தில் ஜெர்மானிய ரோந்து வீரர்கள் யாராவது இருந்தாலும் கூட இங்கே நடந்தது எட்டியிராது.
சபாஷ் லாட்ரெக்! ராக்கெட்டுக்கான எண்ணெயை இந்த ஓடையில் கொட்டுவதால் விபரீதம் ஏதும் நிகழ்ந்து விடாதே?
கவலையே வேண்டாம்..! இந்த ஓடை முகாமை சுற்றியுள்ள அகழியிலிருந்து வருகிறது. எனவே, இதன் நீரை ஜனங்கள் யாரும் குடிக்க பயன்படுத்துவதில்லை!
நான்கு மின்னல் படை வீரர்கள் ஜெர்மானியர்களின் சீருடையை அணிந்து கொண்டார்கள். எண்ணெயை ஓடையில் முழுவதுமாக வடிய விட்டான். மற்ற வீரர்கள் டாங்க்கினுள் குதித்தார்கள்.
உள்ளே நாற்றம் குடலை பிடுங்குகிறது - காப்டன்!
சென்று வாருங்கள் - வெற்றி பெற என் வாழ்த்துக்கள்!
பதினைந்து நிமிடங்களுக்குப் பின் ஒரு வளைவில் அவர்கள் திரும்பியபோது ஏவுகணை தளம் அவர்களுடைய பார்வையில் தென்பட்டது.
நான் கீழே பதுங்கிக் கொள்கிறேன் ஜான் - எதிரிகள் என் சீருடையை பார்க்க முடியாதவாறு!
ஓ.கே. காப்டன்!


நன்றாக ஜெர்மன் மொழி பேசத் தெரிந்த ஜான் ஸ்மித் ஓட்டிச் சென்ற வண்டி முகப் பில் சென்றது. அவர்கள் முகாமை சென்றடைந்ததும் தொலைவீச்சு விளக்கொளி முகப்பு கண்ணாடியை ஊடு ருவிக் கொண்டு ஜான் மீது பாய்ந்தது. இயந்திர துப்பாக்கி களும் அவனை குறி வைத்து தயாராக திரும்பி நின்றன.
பத்து நிமிட தாமதம் ஏன்? அடையாள காகி தங்களை எடுத்துக் காட்டு!
தாமதத்துக்கு மன்னிக்க வேண்டும் தோழர்களே! வழியில் எஞ்சி னில் சின்னதாக ஒரு கோளாறு..!
காகிதங்கள் சரியாக இருந் தன... எண்ணெய் கிடங்கு இருந்த திசை நோக்கிச் செல்லுமாறு வண்டிகள் அனுப்பி வைக்கப்பட்டன
வண்டிகளை எண்ணெய் கிடங்கின் அருகே விட்டுவிட்டு விஞ்ஞானி லாரெளஸ் இருக்கு மிடத்துக்கு செல்வோம். அவரை கண்டுபிடித்து
உடனழைத்துக் கொண்டு மீண்டும் இங்கே வந்து, நாம் வந்ததுபோலவே டாங்க்கினுள் அவரையும் பதுங்கச் செய்து கிளப்பிக் கொண்டு போய்விடுவோம். அவ்வளவுதான்!


வண்டிகள் நான்கும் எண்ணெய் கிடங்கின் அருகே போய் நின்ற ஓரிரு நிமிடங்களுக்குப் பின் தன் சகாக்களுக்கு வெளிவருமாறு சைகை கொடுத்தார் மாத்யூஸ். ஆனால் அவர்களுடைய துரதிர்ஷ்டம், எங்கிருந்தோ வந்து முளைத்த
ஓர் ஜெர்மனியன் அவர்களுடைய பிரிட்டிஷ் சீருடையை கண்டு கொண்டான்...
ஹே.. நீ..நீங்..கள் பிரிட்டிஷ் வீரர்கள் அல்லவா.. இ..இங்கே எப்படி - ?
காதும் காதும் வைத்தாற்போல் காரியத்தை முடித் துக் கொண்டு போய்விடலாம் என்று ஆசைப் பட்டேன். நடக்காது போலி ருக்கிறது. இனி- நேரடி மோதலை தவிர்க்க வழி யில்லை!


குறி வைப்பதில் படு சமர்த்தன் என்று பெயர் வாங்கியிருந்த மிக் பால்ஸ்கி முதலில் துப்பாக்கியை இயக்கி ஓடிவந்த ஜெர்மானியனை தடுத்து நிறுத்தினான்.
ரட்-டட்-டட்..


அந்த தோட்டா முழக்கம் கேட்ட மாத்திரத்தில் அபாய சங்கு பிளிறத் தொடங்கி யது... தடதடவென்று நாலா திசைகளிலிருந்தும் ஜெர்மானிய வீரர்கள் ஓடிவரலாயினர்..
யாருக்கும் அஞ்சி நாம் இங்கே தயங்கி நிற்கத் தேவையில்லை. விஞ்ஞானியின் இருப்பிடம் இந்தப் பக்கம் இருக்கிறது. ஓடி வாருங்கள்.


மின்னல் வீரர்கள் காற்றென பறந்தோடினார்கள்.
ஜான் நீ மற்றவர் களோடு இங்கே நின்று எதிரிகள் வராமல் பார்த்துக் கொள். மிக், ஜுல்ஸ், நாம் மூவரும் போய் லாரென்ஸை இங்கே அழைத்து வருகிறோம்.



எதிரிகள் வசம் சிக்கியிருந்த எல்லா பிரெஞ்சு விஞ்ஞானிகளும் அபாய சங்கு எச்சரிக்கையை கேட்டதுமே குழப்பமடைந்து போயிருந்தனர். மின்னல் படையினர் பாய்ந்து உள்ளே ஓடி வந்ததும் நிஜமாகவே மிரண்டு போனார்கள்.
பீதியடையத் தேவையில்லை. நாங்கள் பிரிட்டிஷ்காரர்கள். லாரெளஸை மீட்டுப் போக வந்திருக்கிறோம். அவர் எங்கே இருக்கிறார்!
ஆண்டவனே..!
நான்தான் லாரெளஸ்..! உங்களோடு நான் வருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. என் மகனையும் உடனழைத்துச் செல்ல வேண்டும்! கீழே ஏதோ ஒரு நில வறையில்
அவனை அடைத்து வைத்திருக்கிறார்கள் - இந்த பாவிகளின் வேண்டுகளோக்கிணங்க நான் பணிபுரிய மறுத்தால், அவனை கொன்று விடுவதாக மிரட்டினார்கள்.
உங்கள் நிபந்தனையை ஏற்றுக் கொள்கிறேன் லாரெளஸ்- கிளம்புங்கள்.
உடையை மாற்றிக் கொண்டு அந்த வயோதிக விஞ்ஞானி கிளம்பத் தயாரானபோது -
காப்டன் எங்களையும் கூட்டிச் செல்லுங்கள். இல்லையேல், லாரெளஸ் தப்பி விட்ட ஆத்திரத்தில் எங்களை சித்திரவதை செய்வார்கள்.


எனக்கு வேறு வழியில்லை என்று தோன்று கிறது. ஆல்ரைட்... எல்லோரையும் உடனடியாக கிளம்பச் சொல்லுங்கள்.
வாருங்கள் காப்டன்..! என் மகனை அடைத்து வைத்திருக்கும் இடத்திற்கு உங்களை கூட்டிச் செல்கிறேன்.


மற்ற விஞ்ஞானிகள் கிளம்ப ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்த வேளையில் காப்டன் மாத்யூஸ் புரபஸரோடு கீழே நிலவறைக்கு விரைந்தார்... வழியில் தனித்து காவல் நின்ற ஜெர்மானிய வீரனுக்கு குரல் கொடுக்கக்கூட அவகாசம் தராமல் இடியென அவனுடைய தாடையில் விழுந்தது ஒரு குத்து!
கும்!
சாவிக் கொத்தை எடுங்கள் புரபஸர்... சீக்கிரம்!
இதோ... எடுத் தாயிற்று!



புரபஸர் தன் மகளை
விடுவித்த வேளையில்
ஜான் தடதடவென்று
படிகளில் ஓடிவந்தான்...
ஜான்.. என்ன
ஆயிற்று?
அதிக நேரம்
தாக்குப் பிடிக்க
முடியாது போலி
ருக்கிறது
காப்டன்..
நாம் துரிதமாக
இயங்க
வேண்டும்!
என்னோடு
வாருங்கள்..
இங்கிருந்து
வெளியேற பின்
புறமும் ஒரு
வாயில்
உண்டு..
ஜெர்மானியர்கள்
அதற்குள் அந்தப்
பக்கமும் சூழ்ந்து
கொண்டிருக்க
வாய்ப்பில்லை!
ஆனால் - துரதிர்ஷ்டவசமாக ஜெர்மானியர்கள் அங்கேயும்
தயார் நிலையில் நின்று கொண்டிருந்தார்கள்...
சுட்டுத் தள்ளுங்
கள்.. தப்பியோட
முனையும்
நாய்களை
ஏவுகணை ஏவப்
படும் குழியை
நோக்கி ஓடுங்கள்
காப்டன்!


இருபக்கமும் தோட்டாக்கள் ஏகப்பட்ட எண்ணிக்கையில் பரிமாறிக் கொள்ளப்பட்டன...
உள்ளே வந்து பதுங்கிக் கொள் - நீதான் கடைசி என்று நினைக் கிறேன்.


பதுங்குவதற்கு ஏவுகணை ஏவப்படும் பள்ளத்தை அவர்கள் தேர்ந்தெடுத்தது சரியான தீர்மானம் அல்ல. நிலைமையை நோட்டம் விட்ட ஜெர்மானிய மேஜர் விகாரமாக இளித்தான்.
பத்திரமாக இருப்பதாக அந்த அறிவிலிகள் மனப்பால் குடிக் கிறார்கள்.. ஐயோ பாவம் - ஹான்ஸ், ஏவுகணை எண்-1 ஐ ஏவ உடனடியாக ஏற்பாடு செய்!


அடுத்து அந்த ஜெர்மானியனின் ஆணவக் குரல் அங்கே நாலா திசைகளிலும் எதி ரொலிக்கலாயிற்று...
சரணடையுங்கள்! இல்லையேல், ஏவுகணையை ஏவச் செய்வேன் - அத்தனை பேரும் கொத்துக் கறியாகப் போவீர்கள்!
எங்கிருந்து வருகிறது அந்தக் குரல்?
அதோ அந்த கோபுர உச்சியிலி ருந்து.. காப்டன்! ஏவுகணையை செலுத்தும் கண்ட்ரோல் டவர் அது!
சரணடைந்து விடுவதுதான் விவேகம் என்று லாரென்ஸ் கருதினர். ஆனால் மாத்யூஸின் எண்ணவோட்டம் வேறுவிதமாக இருந்தது.
எந்தப் பிரச் சனைக்கும் ஒரு தீர்வு உண்டு புரபஸர். இந்த இக்கட்டிலிருந்து விடுபடும் வழியை
நானறிவேன். நண்பர்களே அத்தனை விளக்கு களையும் குறி வையுங்கள்.
ஒரு டஜன் ஸ்டென் கன்கள் ஏககாலத்தில் ஆவேசமாக குமுறின. அதைத் தொடர்ந்து காரிருள் போர்த்துக் கொண்டது அந்தப் பிராந்தியத்தை...
விளக்கை நொறுக்கித் தள்ளி விட்டார்கள் மேஜர்.
இருள் சூழ்ந்து கொண்டால் என்ன... இன்ன மும் நம் ஆட்கள் சுற்றி வளைத்துக் கொண்டுதானே நிற்கிறார்கள்!


மிக்கோடு வேகமாக ஓர் ஆலோசனை நடத்தினார் மாத்யூஸ்.
நீ மேலே ஏறிச் செல்ல முடியும் அல்லவா - மிக்?
வெகு சுலபம்! கை வெடி குண்டு களை தாருங்கள் - ஜமாய்த்து விடுகிறேன்!
தொடர்ந்து நிலவிய நிசப்தம் மேஜரை பொறுமையிழக்கச் செய்தது.
இன்னமும் ஒரு நிமிட அவகாசம் தான் - நீங்கள் சரணடைய தவறினால் ஏவுகணையை செலுத்தி உங்களை அழித்து விடுவேன்.
ஓசைப்படாமல் ராக்கெட்டின் வளவளப்பான சுவரை பற்றிக் கொண்டு மேலே ஏறியது ஓர் உருவம்...
எதிரிகளின் பார்வையில் நான் படாமல் இருட்டு காப்பாற்றுகிறது. அதே சமயம் இலக்கை தேடிக் கண்டு பிடிக்க நிலவொளி போதும் எனக்கு!


ராக்கெட்டின் உச்சிக்கு சென்று விட்ட மிக் நிலவொளியில் எண்ணெய் கிடங்கு இருக்கு மிடத்தை கண்டு கொண்டான்.
''மின்னல் வீரர்கள்'' சாமர்த்தியம் எத்தகையது என்று ஜெர்மானியர்களுக்கு இது நிச்சயம் புரிய வைக்கும்!


மூன்று குண்டுகள் எண்ணெய் கிடங்கின் அருகே அடுத்தடுத்து வெடித்தன.. சட்டென்று பற்றிக் கொண்ட தீப்பிழம்புகள் வானுயர எழுந்தன
கச்சிதமாக தாக்கி விட்டேன்!
பூம் பூம் பூம்


எதிர் அணியில்..
எண்ணெய் கிடங்கின் அருகே தீப்பற்றிக் கொண்டு விட்டது மேஜர்.
எண்ணெய் டாங்குகள் எந்த விநாடியிலும் வெடித்து விடலாம்..
குழாய் மூலம் தண்ணீரை பீச்சிய டிக்க உடனடி யாக ஏற்பாடு செய்.. டாங்கு களை வெடித்து விடாமல் காப் பாற்றியாக வேண்டும்.
தங்களுடைய தந்திரம் பலித்து விட்டதால் மின்னல் வீரர்கள் அணி மீண்டும் வெளியேறி ஓடத் தொடங்கியது.
தீயை அணைப் பதில் அவர் களுடைய கவனம் திசைதிரும்பி யிருக்கையில்
நாம் தலை வாயில் வழியாக எதிர்ப்பை சமாளித்து ஓடிப் போய்விட வேண்டும்!
தம்பி நீ கீழே குதி.. நான் பார்த்துக் கொள்கிறேன்.


இவ்வளவுதானா உன் எடை? கிராதர்கள் உன்னை பட்டினி போட்டார்களா என்ன?
தீப்பிழம்புகள் குடியிருப்பு பகுதியையும் க்பளீகரம் பண்ணத் தொடங்கின... மேஜருக்கு கட்டுக்கு அடங்காத கோபம்.. பழி வாங்கத் துடித்தான்.
அவர்களை பழி வாங்காமல் ஓய மாட்டேன்.. டாங்கிகள் அவர்களை சுற்றி வளைக் கட்டும்!
தலைவாயிலை நோக்கி ஓடிய வர்களை வளைத்து மடக்கி நிறுத்தின டாங்கிகள்.
அகப்பட்டுக் கொண்டு வீட்டீர்கள்.. ஆயுதங்களை தூர எறிந்துவிட்டு சரணடையுங்கள். யுத்த கைதிகளுக்குரிய மரியாதனை அனைத்தும் உங்களுக்கு தரப்படும்.
காப்டன்! எதிரிகளின் ஆயுதக் கிடங்கு நமக்கு நேர்பின்னால் இருக்கிறது!


மாத்யூஸுக்கும் லாரென்ஸுக் கும் ஹெய்ன்மேன் போன்ற ஒரு ஜெர்மானிய மேஜரிடம் நேர்மையை கருணையை எதிர் பார்க்க முடியாது என்று தெளிவாகத் தெரியும்.
காப்டன்.. எக் காரணம் கொண்டும் சரணடையக் கூடாது. பின்னர் சித்திரவதைபட்டு சாவதைவிட இப்போதே பட் டென்று உயிரை விடுவது மேல்!
புரபஸர் சொல் வதுதான் சரி! ஓ.கே. ஆயுதக் கிடங்கை நோக்கி ஓடுங்கள்.
அடுத்து அங்கே நடந்தது ஜெர் மானியர்கள் கொஞ்சமும் எதிர்பாராத ஒன்று...
இதுதாண்டா எங்களுடைய பதில்.. ஹா..ஹா.. அந்த பன்றி என்னமாய் ஓட்டம் பிடிக் கிறது பாரேன்.
மிக்..! விலகு- எப்படி போரிட வேண்டும் என்று நான் அவர் களுக்கு கற்பிக் கிறேன்!


கொஞ்சமும் தயக்கமின்றி மின்னர் வீரர்களும், விஞ்ஞானி களும் தீவிரமாக தாக்கியவாறே தலைவாசலை நோக்கி விரைந்தனர்..
வாழ்க பிரான்ஸ்! கொன்று குவிப் போம் ஜெர் மானிய பன்றிகளை
நெருங்கி விட்டோம்.. தொடர்ந்து முன்னேறுங்கள்.
விடிந்து கொண்டிருந்த வேளையில் அவர்கள் அகழியைக் கடந்து கொண்டிருந்தார்கள்.
கானகப் பகுதியை சென்ற டையும் வரை நாம் ஓட்டத்தை நிறுத்த லாகாது.
சாத்தியம் என்று தோன்றவில்லை காப்டன்.. துரத்தி வரும் டாங்கிகள் நம்மை வெட்ட வெளியில் வைத்து வேட்டை யாடிவிடக் கூடும்!


எனக்கு நம்பிக்கை இருக்கிறது ஜுல்ஸ்.. ஏனென்றால் நான் வேறொரு உபாயத்தை திட்டமிட்டு வைத்திருக் கிறேன்.
லாட்ரெக் சொன்னது நிஜமாக இருக்கும் பட்சத் தில் இந்த ஓடை யில் இப்போது ராக்கெட் எண்ணெய் படர்ந்திருக்கும்.. பொருத்திப் போட்டால் கப்பென்று பற்றிக் கொள்ளும்!
டாங்கிகள் அகழிப் பாலத்தின் வழியே வந்து கொண்டிருந்தன.
இன்னும் சில விநாடிகளில் அவர்கள் வெட்ட வெளியில் இருப்பார்கள்.. சுலபமாக கொன்று குவித்து விடலாம்!
இவர்களை இங் கேயே தேக்கி நிறுத்தி வைக்கா விடில் அதுதான் நடக்கும்!
ஆயிரக்கணக்கான காலன் எண்ணெய் தீப்பற்றிக் கொண்டு கண் சிமிட்டும் நேரத்தில் எரிமலையாய் குமுறி எழுந்தது.
ஆல்வ்.. விலகி ஓட்டு..!


அகழி முழுக்க தீ... அந்த வட்டத்தினுள் மாட்டிக் கொண்ட ராக்கெட் ஏவுதளம் செய்வதறியாது திணறியது. மேஜர் கோபத்தால் வெகுண்டெழுந்தான்.
இந்தச் சுற்றில் அவர்கள் வென்றிருக்கலாம்.. ஆனால் கடற்கரை வரை அவர்களை விடாமல் துரத்தி அழிக்காமல் நான் ஓயப் போவதில்லை!


முகாம் மொத்தமும் தீக்கிரையாகியிருக்கும் இந்நேரம்!


அன்று பகல் முழுக்க கானகத்தினூடே அவர்கள் பயணம் செய்தார்கள். பின்னர் அவர்கள் ஓரிடத்தில் ஓய்வெடுக்க அமர்ந்த போது - லாரெளஸின் மகன் மோரீஸ் பேசலானன்...
இரண்டு குழுவாக நாம் இப்போது பிரிந்து கொள்வது நல்லது காப்டன். பிரெஞ்ச் விஞ் ஞானிகள் என் னோடு வரட்டும். எனக்கு இந்த பிராந்தியம் அத்துபடி... கடல்கரையை சீக்கிரமாகவும் பத்திரமாகவும் சென்றடையலாம்
உன்னுடைய தந்தை எப்போ தும் என்னோடு இருப்பதையே நான் விரும்பு கிறேன் மோரீஸ்.. எங்களோடு வர இஷ்டப்படுகிற வர்கள் தாராள மாக வரலாம்!
இரு நூறு மைல் தொலைவிற்கு இவ்வளவு பெரிய கும்பலாகச் சென்றால் எப்படி இரகசியமாக ஊடுருவ முடியும்?
எங்களுடைய சகாயமின்றி ஜெர்மானிய ஓநாய்களை இவர்களால் - சமாளித்து தப்ப முடியாது.. என்ன வந்தாலும் சரி.. எல்லோரும் சேர்ந்தே போவோம்!


அது ஏறத்தாழ தற்கொலை முயற்சிக்கு ஒப்பானது என்று மாத்யூஸுக்கு தெரியாம வில்லை.. ஆனால் வேறு வழி?
பட்டப் பகலில் திறந்த வெளியில் நாம் சென்றால் எதிரிகள் நம்மை சுலபமாக இனம் கொண்டு கொள்வார்கள்
அந்த நகரில் எங்கேயாவது பதுங்கிக் கிடந்து விட்டு இருட்டி யபின் பயணமாவோம். ஜூல்ஸ் என்னோடு வரட்டும்..
இங்கே ஏதாவது பிரச்னை என்றால் ஜானும், மிக்கும் உங்களுக்கு பாதுகாப்பு தருவார்கள்.


நமக்கு இவ்வூர் மக்கள் ஒத்தாசை செய்வார்களா?
ஏன் மாட்டார் கள்? இவர்கள் பிரெஞ்ச் ஜனங்கள்தானே? ஹலோ.. ஜென்டில்மேன்.. நாங்கள் பிரிட்டிஷ் வீரர்கள். இங்கே ஜெர்மானிய படைப்பிரிவு ஏதேனும் இருக் கிறதா?


அடுத்து நடந்த அதிசயத்தை மாத்யூஸும் ஜுல்ஸும் கற்பனையாகக்கூட எண்ணிப் பார்த்ததில்லை. நாலா திசைகளிலிருந்தும் ஜனங்கள் திமு திமு வென்று ஆர்வத்தோடு ஓடிவந்தார்கள்.
இப்படியொரு வரவேற்பை நான் நினைத்துப் பார்க்கவே யில்லை.
கடந்த நான்கு ஆண்டுகளில் இவர்களின் கண்ணில் படும் முதல் நேசநாட்டு வீரர்கள் நாம்! இவர்களுடைய ஆரவாரத்திற்கு காரணம் வேறொன்று வேண்டுமா என்ன?
நகர மேயர் அவர்களுக்கு விசேட வரவேற்பு கொடுத்தார்
ஓராயிரம் வாழ்த் துக்கள் காப்டன்! இந்த நன்னாளுக் காக நாங்கள் எப்படி ஏங்கிப் போயிருந்தோம் தெரியுமா?
எங்கள் குழுவை சேர்ந்த மற்றவர் கள் கானகப் பகுதி யின் விளிம்பில் ஓய்வெடுத்துக் கொண்டிருக் கிறார்கள். அனை வருக்கு தங்க இட வசதி வேண்டும்.
நகர மக்கள் பெரும் திரளாகச் சென்று விடுதலை குழுவைச் சேர்ந்தவர்களை ஊர்வலமாக ஏகப்பட்ட ஆரவாரத்தோடு அழைத்து வந்தார்கள்


நிலவரம் எத்தகையது என்பதை மாத்யூஸ் நகர மேயரிடம் விரிவாக எடுத்துரைத்துக் கொண்டிருந்தபோது கூட்டத்தை விலக்கிக் கொண்டு பாய்ந்தோடி வந்தான் ஓர் ஆள்...
ஜெர்மானியப் படை வருகிறது- ஏகப்பட்ட டாங்கி களோடு!
வரட்டும்! உங் களுடைய பிரதான படை வந்து சேரும் வரை நாம் எப்படியாவது தாக்குப் படிப் போம்!
பிரெஞ்சு மக்களின் ஆர்வம் மாத்யூஸுக்குப் புரிந்தது. நேச நாட்டுப் படைப் பிரிவுகள் நெருங்கி யிருப்பதாகவும் அவற்றோடு போராடவே ஜெர்மானியர்கள் வந்திருப்பதாக அவர்கள் நினைத்தனர்!
அப்படியில்லை தோழர்களே! ஜெர்மானியர்கள் எங்களை தேடித்தான் வரு கிறார்கள். இந்த விஞ்ஞானிகளை ஜெர்மானி யர்களின் முகாமலிருந்த மீட்டு வந்திருக் கிறோம். எங் களுடைய இந்த அதிரடிப் படை தவிர வேறு இராணுவம் எதுவும் இங்கே வருவதாக இல்லை!


அதைக் கேட்டு பிரெஞ்சு மக்கள் ஏமாற்றமடைந்தனர்..
நாங்கள் கிளம்பு கிறோம்.. ஜெர்மானியர்கள் எங்களை இங்கே கண்டால் ஆத் திரத்தில் நகரத் தையே நாசப் படுத்திவிடு வார்கள்.
கூடாது! எங்களு டைய உதவியை நாடி வந்த உங் களுக்கு உதவி செய்வது எங்கள் கடமை.
வாருங் கள் என்னோடு - உங்கள் அனைவ ரையும் பதுக்கி வைக்க பத்திர மான ஓர் இடம் இருக்கிறது!
மாத்யூஸ் எவ்வளவு சொல்லி யும் கேளாமல் தங்களுடைய தீர்மானத்தில் உறுதியாக இருந்தார்கள் நகர மக்கள்...
ஜெர்மானியர்கள் எங்களை இங்கே பார்த்து விட்டால் உங்களுக்கு ஏற்படப்போகும் கஷ்ட நஷ்டங் களை எண்ணித் தான் கவலைப் படுகிறேன்.


ஜெர்மானிய மேஜர் தலைமைதாங்கி நடத்தி வந்தான் அந்த பீரங்கி படையை...
எங்களுடைய எதிரிகளுக்கு ஒத்தாசை செய்பவர் களுக்கு மரணம் தான் தண்டனை யாக கிடைக்கும்!
உங்களுக்கு எதிராக எந்தக் காரியத்தையா வதுசெய்யும் துணிச்சல் எங்களுக்கு இருக்கும் என்றா நினைக்கிறீர்கள் மேஜர்? அவசியம் என்று நினைத்தால் எங்களுடைய வீடு களில் புகுந்து நீங்கள் சோதனை போட்டுக் கொள்ளலாம்!
ஒயின் தயாரித்து பிழைப்பு நடத்தும் சாதாரண ஜனங்கள் நாங்கள்.
நீங்கள் இங்கிருந்து சீக்கிரம் போய் விட்டால் நன்றியுடைய வர்களாக இருப்போம்.
எவ்வளவு பெரிய கூட்டத்திலும் ஒரே ஒரு பிரிட்டிஷ்காரன் இருந்தாலும் பளிச்சென்று நான் கண்டு பிடித்துவிடு வேனுக்கும்!


ஒவ்வொரு வீடாகப் புகுந்து தேடி விட்டோம் மேஜர்.. அவர்கள் இங்கே இல்லை!
ஒரு டாங்கி மட்டும் இங்கே இருக்கட்டும். மற்றவை கானகப் பகுதியினுள் நுழைந்து ஓரிடம் கூட விடாமல் சல்லடை போட்டு சலிக் கட்டும்..
அதெப்படி அவர்கள் மாயமாக மறைந்து விட முடியும்?
அங்கே யாரும் இல்லை என்று தெரிய வந்ததும் இங்கேதான் திரும்பி வருவார்கள்.
பொழுது விழும் வரை இங்கே இருந்துவிட்டால் இருட்டியதும் ஓசைப் படாமல் நாங்கள் நழுவி விடுவோம்!
நீண்ட அந்த பகல் பொழுது முடிவுக்கு வந்த போது -
மைதானத்தில் நின்று கொண்டி ருக்கிற ஒற்றை டாங்கி ஓர் இடைஞ்சல்!
அதை சமாளிக்கும் வழிமுறையை நாங்கள் அறிவோம் மேயர்!


ஓசைப்படாமல் சாதிக்க வேண்டிய சங்கதி இது.. துப்பாக்கி ஒருமுறை சீறினாலும் மற்றவர்களை இங்கே திரும்ப வரவழைத்து விடும். என்ன செய்ய வேண்டும் என்று உங்களுக்கே தெரியும்.. போங்கள்!
வெகு சுலபம்... காப்டன்!


பிரெஞ்சு பிரஜைபோல உடையணிந்து கொண்டு ஜூல்ஸ் டாங்கியை நோக்கி சாவகாசமாக நடந்து சென்றான். ஜானும் மிக்கும் பூனை போல் பதுங்கிப் பதுங்கி டாங்கியின் பின்புறமாக நெருங்கினார்கள்.
இங்கே ரொம்ப குளிராக இருக் கிறதல்லவா? இதமாக பருக கொஞ்சம் ஒயின் தரட்டுமா?
பிரெஞ்சு பன்றியே இருட்டிய பிறகு இப்படி சாலையில் நட மாடக் கூடாது. தெரியு மில்லையா?


திடீரென்று தன்னை ஒரு
ராட்சஸ கரம் இறுகப் பற்றித்
தூக்குவதை உணர்ந்தான்
அந்த ஜெர்மானியன்..
லபக்!


டாங்கியின் உள்ளே இருந்த
வர்களுக்கோ தங்களை
தாக்கியது யாரென்று
கூடத் தெரியாது..



உங்களை இப்படியே விட்டுப் போக எனக்கு இஷ்டமில்லை தான். உங்களுக்கு எதுவுமே தெரியாது என்று சொல்லி ஜெர்மானியர்களை உங்களால் நம்ப வைத்துவிட முடியும் என்பது உறுதிதானே?
கவலை வேண்டாம் காப்டன்...! அப்போது ஆழ்ந்த நித்திரையிலிருந்தோம் நாங்கள் என்று சொல்லி தப்பித்துக் கொண்டு விடுவோம்!
மாத்யூஸ் தன் சகாக்களையும், விடுவிக்கப்பட்ட விஞ்ஞானிகளையும் பயணத்திற்கு தயார் செய்து கொண்டிருந்த போது, திடீரென்று அருகாமையில் பயங்கர வெடிச் சப்தம் எழுந்தது கேட்டு அனைவரும் திகைத்தனர்..
நரிக் குணம் படைத்த ஹெய்ன்மேனின் தந்திரத்தை நான் சரியாக மதிப்பீடு செய்ய தவறிவிட்டது புரிகிறது.
நாம் எப்படியும் வெளியேறுவோம் என்று நம்பிக்காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய யுக்தி பலித்து விட்டது!
நகரை சுற்றி வளைத்துக் கொண்டு விட்டார்கள் போலிருக்கிறது காப்டன்.


அதைத் தொடர்ந்து ஏகப்பட்ட குண்டுகள் நகரின் பல பாகங்களிலும் வந்து விழலாயின..
முதல் குண்டுக்கு நகரினுள் நிற்கும் டாங்கியிலிருந்து பதில் சமிக்ஞை வரவில்லை. எனவே, அவர்களை பிரிட்டிஷார் எப்படியோ மடக்கி விட்டார்கள் என்று கணித்தேன்.
ஆனால் பிரெஞ்ச் விஞ்ஞானிகளை உயிரோடு பிடிக்க வேண்டியது அவசியமாயிற்றே மேஜர்! பழி வாங்குவது போல் எதுவும் செய்ய மாட்டோம் என்று நகர மக்களுக்கு நாம் உயிர்ப் பிச்சை அளித்தால் அந்த விஞ்ஞானிகளை அவர்கள் நம்மிடம் ஒப்படைக்க தயங்க மாட்டார்கள்!
டாங்க் கமாண்டரின் அந்த யோசனையை அரை மனதோடு ஏற்றுக் கொண்டான் ஹெய்ன்மேன்..
பிரெஞ்ச் மக்களே.. கவனமாக கேளுங்கள்! பிரிட்டிஷ் வீரர்களும் முகாமிலிருந்து தப்பி வெளியேறிய விஞ்ஞானிகளும் உங்களிடையே இருப்பதை அறிவேன். உடனே அவர்களை எங்களிடம் ஒப்படையுங்கள்.
உங்களுடைய ஜனங்களை அப்பால் அழைத்துப் போங்கள். நாங்கள் இங்கே இருந்து எதிர்த்து போராடுகிறோம்!
உங்களோடு தோளோடு நின்று சேர்ந்து போராடுவோம்


வெடிகுண்டுகளுக்கும், பீரங்கி தாக்குதலுக்கும் சாதாரண ஜனங்களால் பதிலடி கொடுக்க முடியுமா என்ற சந்தேகம் மோரீஸுக்கு...
அவர்களை போரிட அனுமதிக்கலாகாது ஜூல்ஸ்... இராணுவ பயிற்சி இல்லாத பாமர ஜனங்கள்.. இலகுவாக பலியாகிப் போவார்கள்.
மோரீஸ்..! போரிடுவது என்று உறுதியாக இருக்கிறார்கள் அவர்கள்..
நம் போராட்ட யுக்தியை தாமதமின்றி திட்டமிட வேண்டிய நெருக்கடி!


சரி.. சேர்ந்தே போராடுவோம்! ஆனால் நான் சொல்லும்படியே நடந்தாக வேண்டும்! முதல் கட்டமாக கண்ணில் படும் அத்தனை பிப்பாய்களையும் நகரின் வடபகுதியில் கொண்டு வந்து குவியுங்கள்-சீக்கிரம்!


சற்றைக் கெல்லாம் டஜன் கணக்கில் காலி பீப்பாய்கள் நகரின் வடபகுதியிலிருந்து மேட்டுப் பகுதியில் கொண்டு வந்து குவிக்கப்பட்டன..
வெரிகுட்! ஒவ்வொரு பீப்பாயிலும் இரண்டு வெடி குண்டுகளை பிணையுங்கள்- பின்னை அவசரப்பட்டு யாரும் இழுத்து விடாதீர்கள் ஜாக்கிரதை! ஜான் நீ உன் நிலைக்கு போ..!


அடுத்த பதினைந்தாவது நிமிடம் அங்கே பிரளயமே நிகழ்வது போலிருந்தது நிலவரம். காலி வீடுகளும், வெறிச்சோடிய வீதிகளும்தான் நாசமாகிப் போயினவே தவிர உயிர் சேதம் ஏதுமில்லை..
நகரைச் சுற்றி வளைத்து நிற்கும் பீரங்கி வரி சையை பிளந்து வழி ஏற்படுத்து வதுதான் நம் இலட்சியம்.


வித்தியாசமான அந்த ஏவுகணைகளை அனுப்ப மாத்யூஸ் உத்தரவிட்ட மறுகணம் பீப்பாய்கள் ஒட்டு மொத்தமாக சரிவில் உருண்டோடின..
யாரும் பின்னை உருவ மறந்துவிட வில்லையே?
ஹே.. என்ன கண்றாவி அது?
வெடி குண்டுகள் பிணைக்கப்பட்ட பீப்பாய்கள்..! அழியுங்கள் ஒன்று விடாமல்!


ஏற்கனவே வசப்படுத்தி வைத்திருந்த டாங்கியை ஓட்டிக் கொண்டு பீப்பாய்களின் பின்னால் விரைந்தான் ஜான்.
டாங்கிகளின் வரிசையில் ஓட்டை விழுந்ததும் அதன் வழியாக அனைவரையும் அழைத்துக் கொண்டு ஓடுங்கள் மேயர்!
நாங்கள் ரெடி... காப்டன்!
எதிரிகளின் இரண்டு டாங்கிகள் வெடிகுண்டுகளால் நாசமாகிப் போயின.. ஜான் அந்த இடைவெளி வழியாக புகுந்து முன்னேறினான்..
எல்லோரும் அந்த டாங்கியின் பின்னால் ஓடுவோம்.. வாருங்கள்..


ஆர்ப்பரிக்கும் கடல் அலை போல் ஜனத்திரள் அந்த இடைவெளி வழியே பாய்ந் தோடி வெளியேறி விரைந்தது
கடைசி நபரும் தப்பியோடும் வரை காத்திருந்துவிட்டு மாத்யூஸ் பின் தொடர்ந்தான்.
ஜெர்மானியர்கள் இந்த இரவை என்றென்றும் மறக்கவே மாட்டார்கள்.
இன்னும் எவ் வளவோ பிரச்னை கள் இருக்கின்றன ஜுல்ஸ்... அவசரப்பட்டு இப்போதே வெற்றி முழக்கம் செய்யாதே!


முடிவில் அவர்கள் ஓய்வெடுக்க நின்றபோது-
நாம் பிரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது.. மேயர். இனியும் நீங்கள் எங்களோடு ஒட்டிக் கொண்டிருந்தால் ஆபத்து உங்களுக்குத்தான்!
கடந்த நான்கு ஆண்டுகளில் முதல்முறையாக சுதந்திரம் என்ற வார்த்தையை இப்போது எங்களால் உச்சரிக்க முடிகிறது என்றால் அது உங்களால்தான்.
நாங்கள் இப்போது உயிரோடு இருக்கிறோம் என்றால் அதுவும் உங்களால்தான்..! நன்றி மறப்பவர்களல்ல நாங்கள்.
கடல்கரையை போனபிறகு பிரிவதைப் பற்றி ஆலோசிப் போம்.
மாத்யூஸ் தோளை குலுக்கிக் கொண்டார்.. - மேலும் மறுத்துக் கொண்டிருக்க இயலாதவராக! ஒட்டுமொத்தமாக கிளம்பிய அந்தப் 'படை'யில் முறையாக பயிற்சி பெற்ற வீர்கள் எண்ணி பதினைந்தே பேர் தான்!


பகல் வேளையில், வழியில் ஏற்றதாக தென்பட்ட ஏதாவது ஓர் மறைவிடத்தில் பதுங்கிக் கிடந்தனர்..
இன்றைக்கு இது நான்காவது விமானம்! ஒரு சதுர அங்குலப் பரப்பையும் மிச்சம் வைக்காமல் சல்லடை போட்டுச் சலிக்கிறார்கள் நம்மைத் தேடி!
ஆத்திரமடைந்த மேஜர் கோபத்தால் கொந்தளித்துப் போயிருந்தான்..
இந்த பிராந்தியத்தை விட்டு அவர்கள் இன்னமும் வெளியேறியிருக்க முடியாது.
எப்படியும் அவர்களை கண்டு பிடித்தாக வேண்டும்.
வாகனங்கள் அத்தனையும் சோதனை செய்யப்பட்டன..
இந்த வழியாக யாரேனும் கும்பலாக போனதை நீ பார்த்தாயா..?
இல்லையே..! ஜெர்மானிய வீரர்கள்தான் போனார்கள்.. ஏன்.. ஏதாவது விபரீதமா?


அவர்கள் கடந்து சென்ற நகரங்களிலும் கிராமங்களிலும் இருந்த ஜனங்கள் மனவுறுதியோடு கொடுத்த ஆதரவு காரண மாக தங்களை தேடித்தேடி அலைந்த ஜெர்மானியர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் அந்த சிறுபடை.
பயணத்தை தொடர முடிந்தது...
இன்னும் கொஞ்ச தூரம்தான் -ஆனால் ஆபத்தானது!
உங்கள் பாது காப்புக்கு நாங்கள் பொறுப்பு.. தைரியமாக புறப்படுங்கள்!


உள்ளூர் புரட்சிப் படை உறுப்பினர்கள் ஜெர்மானிய படை யினரின் நடமாட்டம் பற்றி அவ்வப்போது துப்பு கொடுத்து உதவினார்கள். இந்த விடுதலைக் கும்பல் எப்படியும் தங்கள் முயற்சியில் வெற்றி ஈட்ட வேண்டும் என்று ஒவ்வொரு பிரெஞ்ச் பிரஜையும் உறுதி பூண்டிருந்ததுபோல உதவி வந்து சேர்ந்தது... முடிவில் அவர்கள் இங்கிலீஷ் கால்வாயை வந்தடைந்தார்கள்.
நம் பிரச்னை இன்னமும் முழுமையாக தீர்ந்தபாடில்லை.
இந்த துறை உள் பட அனைத்து துறைமுகங்களை யும் ஜெர்மானி யர்கள் மூடி வைத்திருப்பது நிச்சயம்!


இருட்டும் வரை நாம் பொறுத் திருந்தால் எப்படி யாவது அவர்கள் கண்ணில் படாமல் நழுவி விடலாம்.
அதுவரை இங்கே இருப்பது ஆபத்து! நேரடி மோதல்தான் பிரச்னைக்கு தீர்வாக இருக்க முடியும்!
தன் சகாக்களுக்கும், பிரெஞ்ச் பிரஜைகளுக்கும் கையில் ரைபிளை தந்தார் மாத்யூஸ்.
துப்பாக்கி கிடைக்கப் பெறாத வர்கள் இங்கேயே இருந்து பெண் களையும், குழந் தைகளையும் கவனித்துக் கொள்ள வேண்டியது.. மற்றவர்கள் எதிர்படும் எதிரிகளை தாக்கி வழி ஏற்படுத்த முயற்சிப்போம்!
பிரிட்டிஷ் கமாண்டோக் களோடு பிரெஞ்ச் விஞ்ஞானி களும் சாதாரண பிரஜை களும்.. அது ஒரு வித்தி யாசமான போர்ப்படைதான்!
அவர்கள்தான்! மேஜர் ஹெய்ன் மேனுக்கு உடனே தகவல்கொடு.. பீரங்கிப் படை பின்னாலிருந்து வளைக்கட்டும்.. பொறியில் அகப் பட்ட எலிபோல் மாட்டிக் கொள்வார்கள்!


துறைமுக நகரின் வீதிகளில் விடுதலை பட்டாளம் நுழைந் தபோது சரமாரியாக வந்து விழுந்தன - தோட்டாக்களும் வெடிகுண்டுகளும்.
பரவலாக கலைந்து செல்லுங்கள்.
ஆவ்..!
வயதில் மூத்தவரான லாரெளஸ் வேதனையோடு புலம்பினார்..
என்னால் வந்த வினை.. அவர் களையும் உடனழைத்து வரவேண்டும் என்று நான் வற்புறுத்தி யிராவிடில் இந்த ஆபத்து அவர்களுக்கு வந்திருக்குமா?
நாஜிகளிடம் அடிமைகளாக அடைபட்டு ஈனத் தனமாக வாழ்வதை விட வீரமரணம் மேலானது அல்லவா?


புழுதியை கிளம்பிக் கொண்டு அங்கே விரைந்து நெருங்கியது ஜெர்மானியரின் பீரங்கிப் படை...
கடவுளே..! கூடு தல் படைப்பிரிவு இத்தனை சீக்கிரம் வந்து சேரும் என்று நான் நினைக்கவே யில்லை. ரைபிள் களாலும், மெஷின் துப்பாக் கிகளாலும் பீரங்கிகளை எதிர்த்து நிற்க முடியாதே!
பெண்களும்! குழந்தைகளும் நமக்குப் பின் னால் வந்து கொண்டிருக் கிறார்கள்.. அவர்கள் கதி?
ஆனால் துறைமுக பகுதியிலி ருந்த வேறு சிலருக்கும் இந்த விடுதலை பட்டாளத்தின் வரவு தெரிவிக்கப் பட்டிருந்தது.
நம் இன மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியில் நம்மால் முடிந்த ஒத்தாசை செய்ய வேண்டி யது நம் கடமை. புறப்படுங்கள்..!
சண்டாளர்களை ஒழித்துக் கட்டுவோம்.. வாருங்கள்!


துறைமுக பகுதியின் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் பிரெஞ்சு வீரர்கள் கையிலகப்பட்ட ஆயுதங்களோடு வெளியேறி ஜெர்மானியப் படையினரை திணறச் செய்தார்கள்.
அங்கே என்ன நடக்கிறது என்பதை மாத்யூஸ் சட்டென்று புரிந்து கொண்டுவிட்டார்..
தப்பிச் செல்ல ஒரு பாதையை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள் துறைமுகத்தில் இருக்கும் பிரெஞ்சுக் காரர்கள்.. மிக்! போய் பெண்களையும், குழந்தைகளையும் அருகாமையில் உள்ள படகில் ஏறிக் கொள்ளுமாறு தெரிவிக்கச் சொல்.. ஜானிடம்!


அந்தப் பொறுப்பை ஜான் உடனடியாக நிறைவேற்றினான்.
எதிரிகளின் பீரங்கிப்படை நகரின் முனையில் வந்து கொண்டிருக்கிறது காப்டன்!
கப்பல் சிப்பந்திகளுக்கு நிலைமையை விளக்கிக்கூறு ஜான்.
அவர்கள் எளிதில் புரிந்து கொண்டு முடிந்தவரை ஒத்துழைப்பு கொடுப்பார்கள் காப்டன்.. காரணம் -அவர்களும் பிரெஞ்சு பிரஜைகள்தான்!
நகருக்குள்ளே ஜன நடமாட்டமே இல்லை காப்டன்.
ஆமாம்.. மிக்! நம்மோடு வர விரும்புகிறவர்கள் யாரையும் நாம் கூடாது என்று தடுக்கவில்லை!
எல்லோருக்கும் இடம் ஏற்படுத்தித் தரவேண்டியது நம் பொறுப்பு மிக்! ஜெர்மானியர்களின் தயவில் அவர்களை நாம் விட்டுச் செல்ல முடியாது!


கப்பல்கள் மக்களால் நிரம்பிக் கொண்டிருந்த வேளையில் வெடிகுண்டு நிபுணன் ஜூல்ஸ் ஜெர்மானியர்கள் வரும் பாதையில் உடனடி மரணத்திற்கான ஏற்பாடுகளை துரிதமாக செய்து முடித்தான்..


அவர்கள் பொறுமையோடு காத்திருந்தார்கள். முதல் ஜெர்மானிய டாங்கி தெருவினுள் நுழைந்ததும் வெடிகளை தூண்டி வெடிக்கச் செய்தான் ஜூல்ஸ்.
ஆஆஆ
துறைமுக பகுதிக்கு செல்லும் சாலையில் இப்போது தடை ஏற்பட்டு விட்டது.. அதை அகற்றிவிட்டு முன்னேற குறைந்தது ஒரு மணிநேர அவகாசம் தேவைப்படும் எதிரிகளுக்கு!


ஜூல்ஸும் மற்ற கமாண்டோ வீரர்கள் நால்வரும் துரை முகத்தை நோக்கி ஓடோடி வந்தபோது ஏற்கனவே சில படகு களும், கப்பல்களும் கிளம்பிப் போய்க் கொண்டிருந்தன.
காப்டன்.. ஒரே ஒரு நிமிஷம் காத்திருங்கள். சூட்சும பொறி ஒன்றை உரு வாக்கி வைத்து விட்டு வந்து விடுகிறேன்.
அவசியம்தானா? சரி..சரி.. சீக்கிரம் வந்து சேருங்கள்.
இதற்கிடையே சாலையில் தடை ஏற்பட்டிருந்த இடத்தை வந்தடைந்தான் மேஜர் ஹெய்ன்மேன்...
வீடுகள் அனைத் தும் காலியாக கிடக்கின்றன.. மேஜர்!
எங்கேயாவது ஒளிந்து கொண்டி ருப்பார்கள்! ஒரு கட்டிடம் விடா மல் தேடுங்கள்! ஒரு நகர ஜனத் தொகை மொத்த மும் மாயமாக மறைந்து போயிருக்க முடியாது!


தடைகளை அகற்றிவிட்டு ஜெர்மானியர்கள் ஒரு வழியாக துறைமுக தளத்தை வந்தடைந்து பார்த்தபோது கப்பல்கள் கண்ணுக்கு எட்டாத தொலைவு சென்றுவிட்டிருந்தன.
சைத்தான்கள்! ஒட்டு மொத்தமாக தப்பி விட்டார்கள்! உடனடியாக கப்பற்படைக்கு தகவல் கொடு..! அங்கே என்ன ஆரவாரம் டால்ட்?
ஜெனரல் லெய்ட்ஸ் இங்கே வந்து கொண்டிருக்கிறார் மேஜர்!
கடந்த மூன்று நாட்களாக நீ வெறும் நிழலை விரட்டிக் கொண்டு திரிகிறாய்! உன் கையாலாகாதனத்தினால் நம் இராணுவத்தின் பெருமையே நகைப்பிற்கிடமாகி விடும் போலிருக்கிறது. கடைசியாக ஒரே ஒரு வாய்ப்பு தருகிறேன் உனக்கு!
சாதித்துக் காட்டுகிறேன் ஜெனரல் -


ஜெனரலின் கார் நகரத் தொடங்கியதும் தோல்வியால் தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தையும் அவமானத்தையும் வெளிக்காட்ட சாலையில் அனாதையாக கிடந்த பிரெஞ்சு ஹெல்மெட்டை ஓங்கி ஓர் உதைவிட்டான் ஹெய்ன்மேன். ஜூல்ஸ் கடைசியாக விட்டுச் சென்ற அந்த சூட்சும கண்ணி வெடி இராணுவத்தின் மேல்பட்ட அதிகாரிகள் இருவரை கண்ணிமைக்கும் பொழுதில் பலி கொண்டது!
ஐயோ..யோ!
ஆஆஆ...!


கரையிலிருந்து சில மைல் தொலைவில் - இங்கிலாந்து நோக்கி அணிவகுத்துச் சென்று கொண்டிருந்த கப்பல்களில் ஒன்றில்..
உங்களுடைய இந்த பிரான்ஸ் விஜயத்தை ஜெர் மானியர்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள் காப்டன்..
நானும்தான் மோரீஸ்!


அந்தக் கப்பல்கள் பிரிட்டிஷ் துறைமுகத்தை சென்றடைந்ததை தொடர்ந்து -
ஸார்.. நீங்கள் விடுவித்து கொண்டு வரச் சொன்ன விஞ்ஞானி இந்த கூட்டத்தில்தான் எங்கோ இருக் கிறார்!
கடவுளே! ஒரே ஒரு நபரைத் தானே மீட்டு அழைத்துவரச் சொன்னேன்? நீயானால் இப்படி ஆயிரக்கணக்கில் கொண்டு வந்து சேர்த்திருக் கிறாயே? உன்னை என்னவென்று பாராட்டுவது
முற்றும்

# ஹாட்-லைன்!

வாசக நண்பர்களே,

வணக்கம். வரயிருக்கும் நமது லயனின் 100 வது வெளியீட்டை மிக சிறப்பாகக் கொண்டு வருவதற்கு உங்களிடமிருந்து ஏராளமான Suggestions வந்துள்ளன! அநேகமாக எல்லோருமே **"இதழின் விலை ரூ. 15/- அல்லது ரூ. 20/- ஆக இருக்கட்டும் - ஏராளமான கதைகளும், பக்கங்களும் கண்டிப்பாக வேண்டும்!"** என்று அபிப்ராயப்படுகின்றனர். உங்களின் கருத்துக்களுக்கு கண்டிப்பாக மரியாதை தரப்படும் என்று உறுதியளிக்கிறேன். முழு விபரங்கள் அடுத்த மாதம்!

அடுத்த வெளியீடாக ரிப் கிர்பி தோன்றும் **"பலி கேட்ட புதையல்"** ரூ. 3.50 விலையில் வருகிறது! வழக்கமான ரிப் கிர்பி கதைகளுக்கு ஒரு விதிவிலக்காக இந்த சாகஸம் அமையப் போகிறது! கதையின் க்ளைமாக்ஸ் ஸ்டீபன் ஸ்பீல்பெர்கின் படம் பார்த்த 'த்ரில்'லை ஏற்படுத்துப் போவது நிச்சயம்!

சமீப மாதங்களாக நமது **லயன் காமிக்ஸின் ஆங்கிலப் பதிப்பு** வெளிவந்து கொண்டிருப்பது உங்களில் நிறையப் பேருக்குத் தெரியாது என்று நினைக்கிறேன்! ரூ. 15/- விலையில் - அழகான கலரில், கார்டூன் கதைகளோடு **லயன் காமிக்ஸ் டைஜஸ்ட்** விற்பனையாகிறது! படித்துப் பார்த்து விட்டு அது பற்றிய உங்கள் எண்ணங்களையும் எழுதியனுப்புங்களேன்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!

அன்புள்ள,




கேமரா! ஆக்ஷன்! மர்டர்!
ஆட்டம் முடிந்து கார்கள் எல்லாம் கிளம்பிச் சென்று விட்டன - ஒரே ஒரு காரைத் தவிர! ராக்கியின் ட்யூட்டி முடிந்து விட்டது.. வீட்டுக்குப் போக வேண்டும்.
பிரதர்... யாருக்காகக் காத்திருக்கிறீர்களாம்? எல்லோரும் கிளம்பி போயாச்சு!
நீதானே ராக்கி? நான் உனக்காகத் தான் காத்துக் கொண்டிருக்கிறேன்!


அடி சக்கை! என்ன விஷயம்?
என் முதலாளி உன்னைப் பார்த்து பேசிவிட்டு வரச் சொன்னார்.
இந்தா பத்து டாலர்... பதிலுக்கு ஒரு கவரை கொண்டு போய் பெய்லி அல்லது ஸ்பென்ஸரிடம் நீ சேர்ப்பிக்க வேண்டும்!
இந்த பிஸ்கோத்து வேலைக்கு பத்து டாலரா? உங்க முதலாளி என்ன நோட்டு அடிக்கிறாரா?
நான் சொன்ன நபர்கள் உன் நண்பர்கள் - இல்லையா?
நண்பர்கள்தான்...! அவர்களுடைய ஆபீஸ் கூட இதோ அடுத்த கட்டிடத்தில் தான் இருக்கிறது!
காலையில் நீரே இந்த கவரை சேர்ப்பித்தால் பத்து டாலர் மிச்சம்தானே தாத்தா?
இல்லை - இப்போதே உடனடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும்!


இந்த வேளையில் தட்டி எழுப்புகிற மாதிரி அப்படி என்ன செய்தி கொண்டு வந்திருக் கிறாய்?
தலை போகிற சங்கதியாம்!
ஸார்... அப்படி அதில் என்னதான் எழுதியிருக்கிறது?
நல்ல சேதிதான்.. டி. எல். ப்ராக்கட்டி டமிருந்து வந்திருக் கிறது..!


[redacted] ? பிரபல படத் தயாரிப்பாளரா?
ஆமாம்.. எங்களுடைய சேவை அவருக்கு தேவைப் படுகிறதாம்!
பெய்லியும் ஸ்பென்ஸரும் துப்பறிவாளர்கள்!
ஓடிப் போய் ஸ்பென்ஸரை எழுப்பி பதினைந்து நிமிடத்தில் கிளம்பி ரெடியாக இருக்கச் சொல்... இதோ உடைகளை மாட்டிக் கொண்டு வந்து விடுகிறேன்!
சரி ஸார்... இந்த கவரை கொண்டு வந்து கொடுக்க எனக்கு கிடைத்த வெகுமதி எவ் வளவு தெரியுமா - பத்து டாலர்கள்! இதை ஏன் நான் சொல்கிறேன் என்று புரிகிறதா?


புரியாமல் என்ன..? மொத்தத்தையும் நீயே வைத்துக் கொள்ளலாம் - நான் பங்கு கேட்க மாட்டேன் இம்முறை!
????


சில நிமிடங் களுக்குப் பின் -
ப்ராக்கட்டை நாம் எங்கே சந்திக் கிறோம்?
ஸாண்டா மோனிகா ட்ரைவ்-இன் தியேட் டரில்! அங்கே விடிய விடிய காட்சி நடக்கும்!
BLVD
SCENT DR


விவகாரத்தை இரகசியமாக பராமரிக்க ஏற்ற இடம்தான்!
இந்த சந்திப்பின் போது விவகாரம் மொத்தத்தையும் விளக்கிச் சொல்வ தாக கடிதத்தில் குறிப் பிட்டிருக்கிறார்!
கடைசி வரிசை யிலிருந்து இரண்டாவது - வலது பாதியின் தொடக்கத்தில்...
இதோ இந்தக் கார்தான்...
ஏற்கனவே நான் பார்த்து விட்டேன் இந்தப் படத்தை - டக்கரான படம்!


மிஸ்டர் பெய்லியும் மிஸ்டர் ஸ்பென்ஸரும் தானே?
ஆமாம்!
நான் உங்களுடைய காரில் கர்த்திருக் கிறேன்.. நீங்கள் மிஸ்டர் ப்ராக் கட்டின் காரில் ஏறிக் கொள்ளுங்கள்.


காப்பி சாப்பிடு கிறீர்களா...?
நன்றி..! கடிதம் கிடைத்ததும் உடனே புறப்பட்டு வந்தோம்!


இவ்வளவு முன்னெச்சரிக்கை அவசியம் தானு என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். நீங்கள் என்னோடு இருப்பதை வேறு எவரும் பார்த்துவிடலாகாது என்பதுதான் பிரதான காரணம். நீங்கள் எனக்காக பணியில் ஈடுபடப்போகும் விஷயம் பரம இரகசியமாக பராமரிக்கப்பட வேண்டும்.


பணி என்னவென்று இன்னமும் நீங்கள் சொல்ல வில்லையே!
எனக்கு தேவையான ஒரு தகவலை நீங்கள் சேகரிக்க வேண்டும். ஊதியமாக பத்தாயிரம் டாலர்கள் கிடைக்கும் உங்களுக்கு!


என்ன தகவல் வேண்டும் உங்களுக்கு?
அதி முக்கியத்துவம் வாய்ந்தது போலும்!



ஏகப்பட்ட தகவல்கள் சேகரிக்க வேண்டுமோ!
எனக்கு ஐந்து மில்லியன் டாலர்களுக்கு மேல் பெறுமானம் உள்ளது அந்தத் தகவல்!
பண்டைய யுத்தம் ஒன்றை நான் இப்போது படம் எடுத்து வருகின்ற விஷயத்தை பேப்பரில் நீங்கள் படித்திருப்பீர்கள். ஏற்கனவே நான்கு வார கால தாமதத்தில் திண்டாடிக் கொண்டிருக்கிறேன். நாளுக்கு நாள் நிலைமை இன்னமும் மோசமடைந்து வருகிறது!


திடீர் திடீரென்று விபத்துக்கள், படு காயங்கள், உடல் நல குறைவுகள் என்று..
கடந்த வாரம் கூட ஒரு தீ விபத்து நிகழ்ந்ததாக பேப்பரில் படித்தேன்!


ஆமாம்... அதில் இருநூற்றைம் பதினாயிரம் டாலர் பெறுமானமுள்ள படப்பிடிப்பு அரங்கு அடியோடு நாசமாகிப் போய்விட்டது. அதிர்ஷ்ட வசமாக இன்ஷ்யூர் பண்ணியிருந்தேன். ஆனால் வேறு வகையில் ஏற்பட்ட பொருள் இழப்பு கொஞ்ச நஞ்சமல்ல.


இந்தப் படம் தயாரிக்க என் சொத்து முழு வதையும் பணயம் வைத்திருக்கிறேன்... உரிய காலத்தில் படம் உருப்படியாக வெளிவரவில்லை என்றால் அத்தோடு நான் நிர்மூலமாகிப் போய்விடுவேன். நிலவரம் இப்படியே நீடிக்குமேயானால் பாங்க்கிலிருந்து மேற்கொண்டு பண உதவி வந்து சேராது -


இங்கே நடக்கும் அசம்பாவிதங்களுக் கெல்லாம் யார் காரணம்?அவர்களுடைய நோக்கம்தான் என்ன?என்று கண்டறிந்து எனக்குச் சொல்லுங்கள்!
நடந்த அசம்பாவி தங்கள் எல்லாம் தற் செயலாக நடந்த விபத்துக்களாகவும் இருக்கலா மில்லையா?


இல்லை! எனக்கு அச்சுறுத்தல் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன... அத்தோடு தீ விபத்து திட்டமிட்டு செய்யப்பட்ட சதி என்பதற்கான தடயம் கிடைத்திருக்கிறது!


நீங்கள் ஏன் போலீஸூக்கு போகவில்லை?
அதைப் பற்றி சிந்தித்துப் பார்த்தேன்... விஷயம் அம்பலமானுல் நிலவரம் படு மோசமடைந்து விடலாம் என்றொரு பயம். அதனுல் நடந்த விபத்துக்கள் பலவற்றை செய்தித்தாளில் கூட வராமல் தடுத்து விட்டேன்!


எனவேதான் இரகசியமாக ஆராய உங்களுக்கு அழைப்பு விடுத்தேன். படப்பிடிப்பில் நீங்களும் கலந்து கொள்கிறீர்கள் - நடிகர்களோடும், ஊழியர்களோடும் நெருக்கமாக உறவாட ஒரு வாய்ப்பு கிடைக்கும்.


படத்தில் நடிக்கும் இரு உதிரி நடிகர்கள் நீங்கள். அதற்கான அடையாள அட்டை மற்ற ஏற்பாடுகள் எல்லாம் ஏற்கனவே தயார்...
திட்டமிடுவதில் உங்களை யாரும் மிஞ்ச முடியாது ஸார்!


தாடி வைத்துக் கொண்டு, படம் சம்பந்தப் பட்ட ஆடையணிகளோடு நீங்கள் நடமாடு கிறீர்கள் - யாரும் உங்களை சந்தேகப்பட மாட்டார்கள்!
படத்தில் நடிப்பவர் களின் பெயர் பட்டி யல் ஒன்று எங்க ளுக்கு கிடைத்தால் நல்லது!


உங்களிடம் கொடுக் கப்படும் கோப்பில் அந்த விபரம் இருக்கும். இன்னொரு விஷயம்...
சொல்லுங்கள் ஸார்!


என் மகளும் இந்தப் படத்தில் நடித்து வரு
கிறாள். சின்ன ரோல்தான் என்றாலும் தன்
தொழில் முன்னேற்றத்துக்கு இது உதவும்
என்று நம்புகிறாள். ஏஞ்சல் என்று பெயர்.
கேள்விப் பட்டிருக்கிறேன்.. ஸார்! உங்க
ளுடைய பெயரைச் சொல்லி அதில் குளிர்
காயாமல் தன் சொந்தத் திறமையை மூலதன
மாக வைத்து முன்னேறத் துடிக்கும் இளம்
நடிகை - இல்லையா ஸார்!


ஆமாம்..! அழகிருக்கிறது... திறமை இருக்
கிறது... ஆனால் வயது இருபதுதான்
ஆகிறது.. தொழில் நுட்பம் பற்றி அவள்
இன்னமும் கற்றுக் கொள்ள வேண்டியது
நிறைய இருக்கிறது.
உங்களுடைய இப்
போதைய பிரச்னை
களுக்கும் அவளுக்
கும் ஏதாவது
தொடர்பு உண்டா
ஸார்?



எனக்கு தொல்லை கொடுத்து வரும் நபர் யாரானும் அவளுக்கும் கேடு விளைவிக்க முயற்சிக்கலாம் என்றொரு பயம்! அவள் மீது நீங்கள் எப்போதும் ஒரு கண் வைத்திருக்க வேண்டும்.
சரி... ஸார்! பத்தாயிரம் டாலர்கள் எங்களைப் பொறுத்தவரை சிறிய தொகை இல்லை! ஊதியத்திற்கு ஏற்ற வகையில் விசுவாசமாக பணியாற்றுவோம்.
நாளையிலிருந்து நீங்கள் உங்கள் பணியை தொடங்கி விடலாம்.
சரி... ஸார்!



மறுநாள் காலையில் பெய்லியும் ஸ்பென் ஸரும் படப்பிடிப்பு தளத்திற்குப் போய் அரேபிய வீரர்களுக்குரிய அங்கிகளைப் பெற்று வேடம் புனைந்து கொண்டார்கள்.
டைரக்டர் அங்கே கத்திக் கொண்டிருக் கிறார்.. வேகமாக நடங்கள்!
DO NOT ENTER WHEN RED LIGHT IS ON!
என்ன அவசரம்..! படப்பிடிப்பு நீடிக்க நீடிக்க நமக்கு பணம் கூடுதலாக கிடைக்கு மில்லையா?
அடுத்த சில நிமிடங்களில் படப்பிடிப்பு தொடங்கியது...
சைலன்ஸ்!
எல்லோரும் இப்படி உடல் முழுக்க போர்த்திக் கொண்டு நின்றால் விஷமக் காரனை எப்படி அடையாளம் தெரிந்து கொள்ளப் போகிறோமோ தெரியவில்லை.
உஷ்ஷ்.. டைரக்டர் ஏதோ சொல்கிறார் - கவனமாக கேள்.


அரேபிய துருப்புகள் செக் - போஸ்ட்டை
இப்போது தாக்குகிறார்கள். கைகலப்பு
நடக்கிறது... - ஏற்கனவே நிறைய கால
தாமதம் ஆகிவிட்டது.. எனவே, முதல்
டேக்கிலேயே ஓ.கே. ஆகிற மாதிரி
நடிக்க வேண்டும் - புரிந்ததா?


இரண்டு பேரும் ஏன்
அங்கே தனியாக நிற்
கிறீர்கள் - போய்
மற்றவர்களோடு
சேர்ந்து
கொள்ளுங்கள்.
இதோ...!


டைரக்டர் குரல் கொடுத்தார் - லைட்ஸ், கேமரா, ஆக்ஷன்! உடனே சண்டை தொடங்கியது... கேமரா அதை வெகு சிரத்தையாக படம் பிடித்தது..
ம்ம்... ஆக்ரோஷமாக தாக்குங்கள் - வெகு இயற்கையாக இருக்க வேண்டும் - இது ஒரு ஜீவ மரண போராட்டம்!


ஏய்... மெள்ள.. தத் ரூபமாக இருக்க வேண்டும் என்று டைரக்டர் சொன் னார் என்பதற்காக இப்படியா விளாசுவது?
கோபித்துக் கொள் ளாதே... கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு விட்டேன்..


நான் உணர்ச்சி வசப் பட்டால் என்ன நடக் கும் தெரியுமில்லே?
ஆவ்...!


கட்! பிரமாதமாக அமைந்து விட்டது! போய் சற்று இளைப்பாறிக் கொள்ளுங்கள்!
என்னை நடிகனுக உருவாக்காத என் பெற்றோருக்கு ஆயிரம் கோடி நன்றி ...— சாமி


அடுத்த காட்சிக்கு தயார் செய்யும் ஊழியர்களிடையே நாமும் கலந்து கொள்வோம் - ஏதாவது துப்பு கிடைக்கலாம்!
சரிடாப்பா... தாடிக்காரா!


கிரேனை அருகில் கொண்டு வா... ஏஞ்சலை ராக் எதிரிகளிடமிருந்து காப்பாற்றும் காட்சியை குளோஸ் - அப்பில் எடுக்க வேண்டும்!
சரி ஸார்!


ஏஞ்சல்... ராக் - அடுத்த காட்சியில் நீங்கள் இருவரும் வருகிறீர்கள். எதிரி களிடம் சிக்கிக் கொண்ட இளவரசியை கதாநாயகன் மீட்கிறான்.
ஓ.கே.!



இன்னும் கொஞ்சம் கீழே இறக்கு!
இதோ... இறக்கு கிறேன் ஸார்!
ஐயோ... கிரேன் கீழே விழுகிறது!
டொம்ம்


ஐயோ... என் கை போச்சு!
பொறுத்துக் கொள்.. உன்னை டாக்டரிடம் கொண்டு செல்ல உடனடியாக ஏற்பாடு செய்வார்கள்!


தீ விபத்துக்கள்... உடல் நலக் குறைவுகள்.. படுகாயங்கள்! இப்போது கேமரா மேனுக்கு எலும்பு முறிவு - எனக்கு பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கிறது!
கேமரா நொறுங்கிப் போய்விட்டது ஸார்.. இனி அது பயன்படாது!


என்னதான் நடந்தது? ஹைட்ராலிக்ஸில் ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்கக் கூடும்!
கசிவு நேர்ந்திருக் கிறது - ஆனால் எப்படி?
அதனால்தான் கண்ட் ரோல் இல்லாமல் அப்படி வெட்டுண்ட மரம் போல் கிரேன் விழுந்திருக்கிறது.
யாரேனும் விஷமம் செய்திருப்பார் களோ... நாம் விழிப்போடு இருக்க வேண்டும்... எதிரி படுமோசமானவனாக இருப்பான் போலிருக்கிறது... யாரோ பலியாகப் போகிறார்கள்.


நான் மிஸ்டர் ப்ராக்கட்டை சந்திக்கப் போகிறேன்... இன்றைக்கு இனிமேல் ஷூட்டிங் கிடையாது.... எல்லோரையும் வீட்டுக்கு அனுப்பி விடு!
அப்பா பாவம்..! எல்லாமே விபரீதமாக போய்க் கொண்டிருக்கிறது. இந்தப் படம் தான் அவருக்கு ஜீவ நாடி!
கவலைப்படாதே ஏஞ்சல்! நாம் வேடத்தை களைந்த பின்னர் உன்னை நான் வீட்டிற்கு அழைத்துப் போகிறேன்.
நன்றி ராக்!


அதையடுத்து -
ஏஞ்சல்..
ப்ளீஸ் டவே... இப்போது வேண்டாம் - நான் ரொம்பவும் நொந்து போயிருக்கிறேன்!


ப்ளீஸ் ஏஞ்சல்... உன்னிடம் நிறைய பேச வேண்டும் - இன்றைக்கு இரவு வரட்டுமா?
இன்னமும் பேச என்ன இருக்கிறது டவே..!


ஏற்கனவே தெளிவாக சொல்லிவிட்டேனே என்னுடைய அபிப்பிராயத்தை... ஸாரி டவே - இனிமேல் உன்னை சந்திக்கவே எனக்கு விருப்பமில்லை. நீ போகலாம்!
இது சரியான தீர்மானம் இல்லை ஏஞ்சல்!
நீ எனக்கு இல்லை என்றால் வேறு யாருக்குமே கிடைக்கப் போவதில்லை!
அச்சுறுத்துகிறாயா?


அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்! எவ்வளவோ நயந்து கெஞ்சிப் பார்த்து விட்டேன்.. உன்னை ஒரு நட்சத்திர நடிகை யாக்க உன் தந்தை முயற்சிக்கிறார். அது நடந்து விட்டால் நீ எனக்கு எட்டாக் கனியாகிவிடுவாய்!
டவே.... உண்மை அதுவல்ல! என்னை நட்சத்திரமாக்குவது என் தந்தையின் இலட்சியமல்ல.. என்னுடைய இலட்சியம்! - புரிந்து கொள்.
உனக்கு நான் ஏற்றவனில்லை... அதுதானே உன் கருத்து? உன் தந்தை செல்வந்தராக இல்லாமல் ஓட்டாண்டியாகிப் போனால் நிலைமை தலைகீழாக மாறிவிடும் இல்லையா!
இல்லை... அது அப்படியில்லை!


ஏஞ்சல் ரெடியா?
ஸாரி.. டவே - என்னை நீ மறந்து விடு.. அவ்வளவு தான் சொல்வேன்!
பிரச்னையா? ஏன் மூஞ்சி ஒரு மாதிரியாக இருக்கிறது?
சற்று முன் தற்செயலாக ஓர் உரையாடலை ஒட்டுக் கேட்க நேர்ந்தது. ஆராயப்பட வேண்டிய சங்கதியாக தோன்றுகிறது..


அந்த இளைஞன் யாரென்று... தெரியுமா மிஸ்?
டேவிட் ஹார்ட்!
WARDRO


மேல் விபரம் ஏதாவது சொல்ல முடியுமா?
ஒரு சில படங்களில் நடித்திருக்கிறான்.. நல்ல பையன் - ஆனால் திடசித்த மில்லாதவன்!


அதில் ஆச்சரியப் பட ஏதுமில்லை...
ஏனென்றால் நடிகர் களில் பெரும்பா லோரிடம் அந்த குறைபாடு உண்டு!
வாஸ்தவம்தான்..!


நீ அவனை பின் தொடர்ந்து செல் ஸ்பென் ஸர்.. நான் போய் மிஸ்டர் பிராக்கட்டை சந்தித்து இவனைப் பற்றி அவருக்கு ஏதாவது தெரியுமா என்று விசாரிக்கிறேன்!
சரி!


அன்றிரவு
ஏதாவது தெரிந்து கொள்ள முடிந்ததா?
உருப்படியான தகவல் ஏதுமில்லை. நடிகர் களுக்கான ஹாஸ்டலில் தங்கியிருக்கிறான். ஒழுங்காக பணம் செலுத்திக் கொண்டு வரு கிறானாம். ஸ்டாராக வரவேண்டும் என்ற இலட்சியத்தோடு கடுமையாக உழைக்கிறானாம்!


ப்ராக்கட்டிடமிருந்து சாரமான தகவல் கொஞ்சம் கிடைத்தது. ஏஞ்சலுக்கும் டேவிட்டுக்குமிடையே நல்ல பழக்கம் உண்டாம். அவளை சில தடவைகள் வெளியே அழைத்துப் போயிருக் கிறானாம்.
இருவருக்கிடையேயும் காதல் இருந்திருக் குமோ..? இன்றைக்கு கேட்ட உரையாட லிலிருந்து அவனை அவள் ஏனோ ஒதுக்கு கிறாள் என்று தெரிகிறது.


தன் காதலுக்கு ப்ராக்கட்டின் செல்வச்
செழிப்பு தடையாக இருப்பதாக நினைக்
கிறான் போலும். அவனை நாளை நுணுக்
கமாக கண்காணிக்க வேண்டும்.
என்ன? நாளை
படப்பிடிப்பு இருக்
கிறதா - இவ்வளவு
கலாட்டா நடந்த
பிறகும்?


ப்ராக்கட் வேறொரு கேமரா மேனை ஏற்
பாடு செய்திருக்கிறார். படம் ரிலீஸ்
ஆவது மேலும் ஒருநாள் தாமதமானால்
எல்லாமே நாசமாகிப் போய்விடும்
என்று பயப்படுகிறார்.


அதை தொடர்ந்து -
ஸார்... ஸ்டாரா ஆனப்புறம் இந்த ஏழையை மறந்து விட மாட்டீங்களே!
இந்த ராக்கி சரியான தமாஷ் பேர்வழி!


மறுநாள் -
இன்றைய காட்சியில் அரேபியர்கள் சரமாரியாக சுடுகிறார்கள். அதில் ஒரு தோட்டா உன் மீது பாய, நீ செத்து விழுகிறாய் ஏஞ்சல்!
ஜமாய்த்து விடுகிறேன் ஸார்!


இன்றைக்கு உச்ச கட்டம்... ரெடியாக இரு!
ஹூம்.. ஏஞ்சல் மாதிரி ஒரு அப்பாவி அழகியை சுட்டுக் கொல்வது என்பது வெட்கக் கேடான சங்கதி!
ஆல்ரைட்! அரேபியர்கள் ஆயுத்த மாகுங்கள்!
ம்ம்.. புறப்படுங்கள்!


ஸ்பென்ஸர் என்ன ஆயிற்று? ஏன் நின்று விட்டாய்?
சின்ன உறுத்தல்! இந்த ரைபிள்.. வழக்கமானதாகத் தோன்றவில்லை... ஏதோ ஒரு வித்தியாசம்..
முன்னேறிச் செல்ல சமிக்ஞை தரப்பட்டது.
நான் வைத்திருந்த ரைபிளின் கைப்பிடி பகுதியில் அழுத்த மான கீறல் ஒன்று இருந்ததே... ஆனால் இதில் -


கட்..! நீ.. ஏன் மற்றவர்களோடு சேர்ந்து ஓடாமல் நின்று விட்டாய்!
இந்த ரைபிள் - வேறொன்று!


என்ன ஆயிற்று? என்ன கேடு வந்தது?
இதுதான் கேடு! இந்த தோட்டாக்கள் நிஜமானவை! யாரோ ரைபிளை மாற்றி வைத்திருக் கிறார்கள்!


டேவிட்.. எங்கே ஓடுகிறாய் - நில்!
இனியும் இங்கே நின்றால் ஆபத்து ஓடிப் போய்விட வேண்டும்!


ஒன்றிரண்டு கேள்வி களுக்கு உன்னி டருந்து பதில் வேண்டும் அப்பனே!


ரைபிளை மாற்றி வைத்தது நீதானே?
அவள்... அவள் என்னை புரிந்து கொள்ள வில்லை! அவளை ராணி மாதிரி வைத்துக் கொள்ள என்னால் முடியும். ஆனால் அவள் என்னை தூக்கி எறிந்து பேசிவிட்டாள்!


அதையடுத்து -
என்ன.. என் தந்தை உங்களை அமர்த்தி யிருந்தாரா.. நீங்கள் துப்பறியும் நிபுணர்களா?
ஆமாம்.. மிஸ்! அப்பப்பா... நடிகர்களாக இருப்பதில் எவ்வளவு கஷ்டம்!


பின்னர் -
உங்களுக்கு என் நன்றி... குறிப்பாக என் அருமை மகளின் உயிரை காப்பாற்றி யதற்காக!
எங்களுக்கு நீங்கள் கொடுக்கும் ஊதியத் தோடு கொஞ்சம் கொசுறாக வேறொன் றும் வேண்டும் மிஸ்டர் பிராக்கட்! வேறொன்றுமில்லை.. இந்த படத்திற்கு நாலைந்து ஓசி டிக்கட்டுகள் வேண்டும். அங்கே ராக்கி என்றொரு சந்தேகப் பிராணி இருக்கிறது. நாங்கள் படத்தில் நடித்திருக்கிறோம் என்று சொன்னால் நம்பவே மாட்டான்!
முற்றும்

## புக் மார்க்கெட்

உங்களிடம் நமது முந்தைய காமிக்ஸ்கள் நிறைய இருக்கலாம். ஏதாவது ஒரு காரணத்தால் அவற்றை விற்பனை செய்ய நினைத்தீர்களானால் புக்குகளின் பெயரையும் உங்கள் முகவரியையும் குறிப்பிட்டு எழுதி அனுப்புங்கள். புக் மார்கெட்டில் "**விற்பனை**" பகுதியில் அதைப் பிரசுரிக்கிறோம். அந்த புக்குகளை வாங்க விரும்பும் புது வாசகர்கள் உங்களோடு நேரடியாகவோ தபால் மூலமாகவோ தொடர்பு கொள்வார்கள்.

அதேபோல குறிப்பிட்ட சில வெளியீடுகள் உங்களுக்குத் தேவையெனில் அதைப் பற்றிய விபரத்தை எழுதி அனுப்புங்கள். "**தேவை**" பகுதியில் பிரசுரிக்கிறோம்.

### விற்பனைக்கு :

**லயன் :**

1. ஒரு பனிமலை பயங்கரம்
2. மீண்டும் ஸ்பைடர்
3. புதையலைத் தேடி
4. எமனுக்கு எமன்

**திகில் :**

1. சைத்தான் சாம்ராஜ்யம்
2. மரணத்தோடு மோதாதே

**மினி லயன் :**

1. தேவை ஒரு மொட்டை
2. கொள்ளைக்காரக் கார்

*பிரதிகள் தேவையெனில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி*

**N. P. சிங்கார வேலு,**
122, மாரியம்மன்கோவில் தெரு,
பெரமனூர், சேலம் - 7.

## தேவை!

**லயன் :**

1. கத்தி முனையில் மாடஸ்டி
2. உலகப் போரில் ஆர்ச்சி

**திகில் :**

3. இரத்தப் படலம் - III

மேற்கண்ட புக்குகளை வாங்கத் தயாராக இருக்கும் வாசகர் :

**நெல்லி இருதயராஜ்**
அ. கட்டுபடி & Post
(Via) T. B. சானடோரியம்
வேலூர் - 632 011.

## விற்பனைக்கு!

**திகில் :**

1. சாவதற்கு நேரமில்லை
2. பனிமண்டலக் கோட்டை
3. மர்ம மண்டலம்
4. இரத்தக் காட்டேரி மர்மம்
5. மர்மச் சவப்பெட்டிகள்
6. பனிமலை பூதம்
7. மர்மக் கத்தி
8. பிசாசுக் குரங்கு

மேற்படிப் பிரதிகள் தேவையெனில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**R. ராஜா**
40, கங்கை வீதி, வசந்தி நகர்,
புதுச்சேரி - 605 003.

## தேவை!

**லயன் :**

1. சதி வலை
2. பழி வாங்கும் பொம்மை
3. சதுரங்க வெறியன்
4. மாஸ்கோவில் மாஸ்டர்
5. ஆப்பிரிக்க சதி
6. யார் அந்த மனி ஸ்பைர்?
7. யார் அந்த ஜுனியர் ஆர்ச்சி?
8. பாதாளப் போராட்டம்

இந்த புக்குகளை வாங்கத் தயாராக இருக்கும் வாசகர் :

**R. சரவணகுமார்**
ஜேடர்பாளையம், ஸ்ரீசெளடேஸ்வரி கோவில் அர்ச்சகர்,
ஜேடர்பாளையம் - 637 213,
(Via) திருச்செங்கோடு.

# வாசகர் கடிதம்

● ***பாரதி நந்தீஸ்வரன், குமாரபாளையம்.***

அட்டகாசமான கதை படிக்க வேண்டும் என்ற எங்கள் மனதின் வேட்கைக்கு வந்தது லயனின் ''கானகக் கோட்டை!''.

● ***K. செல்வமூர்த்தி, தருமபுரி.***

தத்ரூபமான படங்கள்.,. யதார்த்தமான கதை... சரள மான வசன நடை.... லயனின் ஒன்பதாவது ஆண்டு மலர் டாப் டக்கர்!

● ***M. இமானுவேல், திசையன் விளை.***

மேங்க்ளரோடு ரிப் கிர்பி மோதும் கதைகள் அத்தனை யும் செம விறுவிறுப்பு! இதற்காகவே மேங்க்ளர் கைதாகா மல் இருக்க வேண்டும்! ''விசித்திர விடுமுறை'' சிறுகதை யும் நன்றாக இருந்தது.

● ***D. ராசெல், அம்பை.***

புதிய அறிமுகமான ''ராக்கி'' கதைகள் தொடர்ந்து வருமா - அல்லது ஒரு கதையோடு அவரை தலைமறை வாக்கி விடுவீர்களா?

(ஆசிரியர் குறிப்பு: அடிக்கடி வருவார் மேடம்!)

● ***S. S. ராஜாசங்கர், மதுரை.***

ஆண்டு மலரை பத்து ரூபாய் விலையில் வெளியிட்டு அசத்தியிருக்கலாமே? கானகக் கோட்டை கதை சூப்பர்.



அடுத்த வெளியீடு!



உங்கள் அபிமான முத்து காமிக்ஸில் வருகிறார்!

சர்வதேச சாகஸ வீரர் No. 1

# ஜேம்ஸ் பாண்ட் 007




புத்தம் புதிய ஜேம்ஸ்பாண்ட் கதைகளை
சூப்பர் சைஸில், தரமான மொழிபெயர்ப்போடு
நீங்கள் படித்து ரசிக்கலாம்!




# புள்ளிகளை இணையுங்கள்!


ஒரு ரூபாய் நூலகம்!
யனின் 9-வது ஆண்டு மலர்!
வருகிறது!
விபரம் உள்ளே!
விலை ரூ. 5-00